# தமிழரின் கலைகள் - நடனம் – ஓர் ஆய்வு

27

அ.சுஜாதா[1], முனைவர் வெ.பாலா[2]

[1]மாவட்ட அரசு இசைப்பள்ளி, கரூர் – 1 chinnamanur.sujatha@gmail.com

[2] முதல்வர் (ஒய்வு), ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம் இசைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை-2

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்நாட்டில் தஞ்சை கலைகளின் பிறப்பிடம் அனைவரும் அறிந்ததே!

சோழ வழ நாட்டில் பார்போற்றும் வண்ணம் தலை சிறந்த நடனக் கலைஞர்களும் நட்டுவனார்களும் வாழ்ந்தனர் சோழ மன்னர்களும், பல்லவமன்னர்களும் நடனக்கலையை வளர்த்ததில் முக்கியப் பங்கு வகிப்பர்.

பூஜை வழிபாடு போன்றவைகளில் நடனம், திருவிழாக் காலங்களில் நடனம், மன்னர்கள் அரச அவையில் நடனம் என பல்வேறு நிகழ்வுகளில் நடனம் முக்கியபங்கு வகுத்திருக்கின்றன. நட்டுவனார் பரம்பரையில் மரபு வழிவந்த நடனக் கலைஞர்கள் நடனக்கலையை வளர்த்தும் போற்றி பாதுகாத்தும் வந்துள்ளனர்.

பக்தியுடனும் பண்பாடு கலாச்சாரம் இதிகாச இலக்கியங்கள் என இவைகளை நடனத்தின் மூலம் எடுத்துக் கூறுவதால் நடனம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றன.

**முதன்மைச் சொற்கள்**

ஆலயம், மன்னன், நடனம், ஓவியங்கள், சிற்பங்கள், ஆழ்வார்கள், நட்டுவனார்கள்

**முன்னுரை**

நம் நாட்டின் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதில் இசையும், நடனமும் முக்கியப்பங்கு வகிக்கின்றது. தொன்மை வாய்ந்த இக்கலைகளை நமது முன்னோர்கள் போற்றிப் பாதுகாத்து, வருங்கால சந்ததியினருக்கு அளித்துள்ளனர். தமிழர் கலாச்சாரத்தின் முக்கியமாக கருதப்படுவது ஆலயங்கள், கலைகள், பண்பாடு போன்றவைகளாகும். இசையும் நடனமும் நம் நாட்டின் இரு கண்கள் எனக் கூறலாம். கலைகளை வளர்த்ததில் சமயங்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**நாட்டியம், நர்த்தனம்**

நாட்டியம், நர்த்தனம் இரண்டு சொற்களும் வெவ்வேறு இடமாகப் பிறந்தவை. நாட்டியம் என்பது “நட்” அதாவது நடித்தல் அல்லது அபிநயித்தல் என்றும், நர்த்தனம் என்பது “ந்ருத்” அதாவது ஆடுதல் என்பது பொருளாகும். இவ்விரு சொற்களும் முறையே நடித்தல், ஆடல் எனலாம். இவ்விரு கலைகளையும் ஒன்று சேர்த்த பெருமை பரத முனிவரைச் சார்ந்ததாகும்.

ஒரு காலத்தில் மக்கள் ஒருவரையொருவர் துன்புறுத்தி அதில் சந்தோசம் அடைந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குக் குற்றமற்ற வழியில் ஒரு கலையைப் படைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதுவே நாட்டியக் கலையாகும். நாட்டியக்கலை ஏற்படுவதற்கு முன்னதாகவே நர்த்தனக் கலை பரமசிவனால் ஆனந்தப் பரவச நிலையில் ஆடப்பட்டது. அவ்வாறு பரமசிவனால் ஆடப்பட்டு

ஆடலுக்கு அரசனான நடராசர், “தண்டு” எனும் பெயருடைய நந்தி கேசுவரருக்கு அக்கலையை அருளுகின்றார். பரமசிவனின் ஆணைப்படி “தண்டு” பரதக் கலையை பரத முனிவருக்கு கற்பிக்கின்றார். இதுவே தாண்டவம் ஆகும். அதன்பின் பரமசிவனின் ஆக்ஞைப்படி “லாஸ்யம்” எனும் ஸ்திரீ நடனத்தை பார்வதி தேவியார் தாமே ஆடிக்காட்டி, பரதர் அதைக் கற்றுக்கொள்ளும்படி செய்தார்.

இவ்விதமாக அபிநயத்துடன் தாண்டவமும், லாஸ்யமும் நாடகத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்தனர். வார்த்தைகள், சுரங்கள், வாத்திய ஒலிகளாகிய ஜதிகள் என்னும் சொல்லுக் கட்டுகள் இவைகளோடு, சாகித்தியங்களுக்கு ஏற்றாற்போல் நர்த்தனம் செய்யப் பட்டது. இவ்விதமாக நர்த்தனம் நாடகத்தின் சங்கீதப் பகுதியில் அபிநயத்தோடு சேர்ந்து நடனமாகிவிட்டது. அபிநயத்திற்கு பரதரின் “நாட்டிய சாஸ்திரம்” எவ்வாறு ஆதார நூலாக விளங்குகின்றதோ அதுபோன்று நர்த்தனத்திற்கு நந்திகேசுவரரின் “பரதார்ணவம்” ஆதார நூலாக விளங்குகின்றது.

**ஆலயம்**

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என ஔவையாரும் “ஆலயந்தானும் அரனெனத் தொழுமே” என்று மெய்கண்ட தேவநாயனாரும் கூறியுள்ளனர். ஆலய வழிபாடு என்பது இறை வழிபாடு என்று பொருள்படும்.

ஒரு மனிதனை நெறிப்படுத்துவதற்கு ஆலய வழிபாடு மிகவும் முக்கியம். அதுபோன்று மனிதனின் மனதைப் பக்குவப்படுத்துவது இசை, நடனம் மற்றும் யோகக்கலை போன்ற நுண்கலைகள் ஆகும். மனிதனை செம்மைப் படுத்துவதற்கும், வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றுவதற்கும் கலைகள் ஒரு பாலமாக விளங்குகின்றது. சதா நடம் புரிந்து கொண்டிருக்கும் தில்லைக் கூத்தன் அம்பலவாணன் தனது தாண்டவத் திருமேனியின் மூலம் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துகின்றார். அவ்வாறு ஆடிய திருக்கோலம் தில்லை என்றழைக்கப்படும் சிதம்பரத்தில் இடது பதம் தூக்கி, நடராச மூர்த்தியாக சிவகாமி அம்மையுடன் அருள் பாலிக்கின்றார்.

1. **படைத்தல்** : வலது மேல் கை உடுக்கை ஒலியிலிருந்து படைப்புத்தொழிலையும்
2. **காத்தல்** : வலது அபயகரம் காத்தல் தொழிலையும்
3. **மறைத்தல்**: முயலகன் மீது ஊன்றிய வலது திருவடி மறைத்தல் தொழிலையும்
4. **அருளல்** : இடது தூக்கிய திருவடி அருளல் தொழிலையும்
5. **அழித்தல்**:அக்கினி ஏந்திய இடது மேல் கை அழித்தல் தொழிலையும் புரிந்து வருகின்றார்

திருமூலர் ஒரு மனித உடலமைப்பை ஆலயமாகக் கருதி, கீழ் காணும் திருமந்திரம் வாயிலாக எடுத்தியம்புகின்றார்.

*“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானாருக்கு வாய் கோபுர வாசல்*
*தெள்ளத் தெளிந்தாருக்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே”*

(திரு மந்:1823)

திருமூலர் மட்டுமின்றி சகல ஞானிகளும் காட்டிய பாதையல்லவா. திருநின்றவூரிலே அகிலம் படைத்த ஆலவாயனான ஈசன், லிங்கத் திருமேனியாக விளங்கி அருள் பாலிக்கின்றார். இங்கு காணப்படும் ஈசனுக்கு மேற் கூரையில்லை. வெயிலிலும் மழையிலும் இறைவன் இருப்பதைக் கண்ட அவ்வூரில் வாழ்ந்து வந்த பூசலார் என்பவர் இறைவனுக்கு ஆலயம் எழுப்ப முற்பட்டார். அவரிடம் பொருள் இல்லாமையால் “புறத்தே கோயில் எழுப்பத்தானே பொருள் தேவை, அகத்தே அவனை நிறுத்தி, கோயில் செய்குவோம்” என்று மனதில் கோயிலைக்கட்டி, கும்பாபிஷேகம் செய்ய நாள் குறிக்கவே, அதே நாளில் காஞ்சிபுரத்தை ஆண்ட பல்லவ மன்னன் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்ய நாள் குறிக்க, மன்னனின் கனவில் ஈசன் தோன்றி, எனது பக்தன் பூசலார் கட்டிய கோயிலில் அதே நாளில் கும்பாபிஷேகம் செய்வதாகவும், அங்கு இறைவன் எழுந்தருள இருப்பதாகவும் கூறினார். பெரும் பொருட்செலவில் மன்னன் கட்டிய கோயிலை விட பூசலார் நாயனார் கட்டிய மனக் கோயிலில் அல்லவா இறைவன் எழுந்தருளினார்.

ஆலயங்களில் பூஜைகளின் நடனம்:

தினசரி கோவில்களின் 6 கால பூஜைகளின் நடைபெற வேண்டும் என்பது நியதியாகும்.

1. திருப்பள்ளி எழுப்பும் பூஜை
2. காலசந்தி பூஜை
3. உச்சிகால பூஜை
4. சாயங்கால பூஜை
5. இரண்டாம் காலபூஜை
6. அர்த்தசாம பூஜை என்பதாகும்

ஒவ்வொரு கால பூஜைகளின்முடிவிலும் வேதம் ஓதுதல், ஸ்தோத்திரம் கூறுதல், மங்கல வாத்தியம் வாசித்தல், தேவார திருவாசகம் பாடுதல், நடனம் ஆடுதல், சங்களின் ஒலி எழுப்புதல் ஆகிய முழக்கங்களுடன் வழிபாடு செய்ய வேண்டும் என்பது விதியாகும்.

**பரதக்கலையில் வழுவூர் மரபு**

வழுவூர் அட்ட வீரட்டத்தலங்கள் ஒன்று வழுவூர் நாட்டிய மரபு மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். இத்தலம் சிவன் யானையை உரித்த நிலையைக் கூறும் கஜ சம்காரமூர்த்தியாக விளங்குகின்றனர். கஜ சம்காரநடன நவதாண்டவத்தில் ஊர்த்துவதாண்டவமாக போற்றுப்படுகின்றன. நடன சபைகளின் ஞானசபையாகக் கருதபடுகின்றன.

நட்டுவனார்கள்

பரதக்கலையில் வழுவூர்பாணி என்றதொருபாணியை அமைத்த பெருமை வழுவூரில் தோன்றிய நட்டுவனார்கலையே சாரும்.

1. பாடுவார் சாமுபிள்ளை - 1844 -1903
2. வழுவூர் மாணிக்கநட்டுவனார் - 1867 - 1949

3. வழுவூர் இராமையாபிள்ளை - 1910 - 1991
4. வழுவூர் பி.ராமதாஸ் - 1936 - 1996
5. வழுவூர் சாம்ராஜ் - 1938 - 2005
6. வழுவூர் பழனியப்பன் - 1961
7. வழுவூர் ஆறுமுக நட்டுவணன் -
8. வழுவூர் வீரப்ப நட்டுவணன் -

**வழுவூர் இராமையாபிள்ளை (1910-1991)**

வழுவூர் பாணி என்ற பாணியை இராமையாபிள்ளை உலகறியச் செய்தார். வழுவூர் நடன பாணி தனி ரகமானது இதில் இவரது கலைத்திறமையை ஆளுமையையும் நன்கு உணரலாம் வழுவூர் நடன பாணியில் சறுக்கல்களும், பாய்தல்களும் அரங்கத்தில் மின்னல் கீற்றுகள் போலத் தோற்றமளிக்கும் பல எண்ணற்ற மாணாக்கர்களை திறம்பட உருவாக்கியுள்ளார்.அது மட்டுமல்லாது இவரிடம் நட்டுவாங்கப் பயிற்சி பெற்று நாட்டிய ஆசிரியர்களாக விளங்குபவர்கள் பலர்.

**விருதுகள்**

**இவர் பெற்ற விருதுகள்**

1. நாட்டிய கலாகேசரி (1948)
2. இசைப் பேரரறிஞர் (1961)
3. சங்கீத நாடக அகாடமி விருது (1966)
4. பத்மஸ்ரீ - போன்ற விருதுகளை பெற்றுள்ளார்

நாட்டியத்தில் பல புதுமைகளைச் செய்தும் காரணங்கள் அழகான சிலை போன்ற நடன நிலைகளை மாணவர்களுக்குகற்றுத் தந்தார். பல நடனஉருப்படிகளையும் நாட்டிய நாடகங்களையும் இயற்றியுள்ளார். நடனக்கலைவரலாற்றில் வழுவூர் நடனபாணியின்சிற்பி என்றால் மிகையாகாது.

தளிச் சேரி பெண்டுகள்

தஞ்சையை ஆண்ட மாமன்னன் முதலாம் இராசராசன் நாட்டியப்பணி செய்ய தனிசேரி பெண்டுகளை பல்வேறு தளங்களிலிருந்து வரவழைத்துதஞ்சையில் பணியமர்த்திய செய்தி பெருவுடையார் கோவில் கல் வெட்டு மூலம் அறியமுடிகிறது. இவர்களின் இல் உள்ளவர்கள் வழுவூர் அவனிய மதர்புரத்து நக்கன் என்பவரும் டைவிடை ஈஸ்வரத்து நக்கன் அரிகுல கேசரி என்பவரும் வழுவூரிலிருந்து தஞ்சைக்குத் தெரிவிக்கபட்டது அறிய முடிகின்றது

அரையர் சேவை

வைணவ கோவில்களில் ஆழ்வார்களால் அருளிச்செய்த செய்த நாலாயிரம் திவ்வியபிரபந்தங்களை சேவிப்பது வழக்கமாகும் அரையர்கள் இறைவனுக்குச் செய்யும் சேவை அரையர் சேவை எனப்படும். அதாவது ஆல்வாரின் பாசுரங்களுக்கு அரசராக இருந்து காப்பவர் என்பதுபொருள்.

இத்தகைய அரையர்களை விண்ணப்பஞ்செய்வார், நம்பாடுவன், இசைக்காரர், தம்பிரான்மார் என்றும் கூறுவதுண்டு விழாக்காலங்களில் வீதியுலா எடுத்துச்செல்லப் படும் சுவாமியாகிய உற்சவ

மூர்த்திக்கு முன்பு மட்டுமே அரையர் சேவை நடைபெறும். அரையர் சேவை எனும் இந்த முத்தமிழ்கலையை கொண்டாட்டம், பாசுரங்களைப் பண்ணுடன் பாடுதல் பாசுரத்திற்கு அபிநயம் செய்தல்பாசுரத்திற்கு உரைகூறுதல் என்னும் நான்கு பிரிவாக அமைந்திருக்கும். இதில் கொண்டாட்டம் என்பது இறைவனின் புகழைப் பாடுவது ஆகும்.

அரையர் எனும் பட்டப்பெயர் கொண்ட வைணவ அந்தணர் குடும்பத்தினர் பரம்பரையாக செய்து வரும் இவ்வழியாக அரையர் சேவை என்றழைக்கப்படுகிறது. கையிலே தாளத்தை வைத்துக்கொண்டு பாடியும் அபிநயம் செய்தும், விளக்கங்களை கூறியும் அரையர் சேவை செய்வர்.

ஸ்ரீரங்கத்தில் உற்சவகாலங்களில் பகல்பத்து, இராப்பத்து என்று நடைபெறும் பகலில் அரங்கநாதனுக்கு வடமொழியில் சதுர்வேதங்கள் முழங்குவதுவழக்கம் வடமொழி வேதங்களுக்கு இணையான நமது தமிழ்வேதமாகிய பிரபந்தகளுக்கும் கொடுக்கவேண்டும் என்பது திருமங்கையாழ்வாரின் ஆவல் அதனால் ஒருகார்த்திகைத் திருவிழாவின் போது உற்சவரின் முன் திருமங்கையாழ்வார் தானே தமது திருநெடுந்தான்டகம் பாசுரங்களை பண்ணுடன் பாடி அபிநயித்தார். இதனைக்கேட்டு மகிழ்ந்த எம்பெருமானிடம் சதுர்வேதங்களுக்கு இணையான மதிப்பினை பாசுரங்களுக்கு வழங்கவேண்டும் என திருமங்கையாழ்வார் அரங்கனிடம் வேண்டிட உடனே அரங்கர் இராப்பந்தில் பாடுவதற்கு அருள்மொழிந்தார் அதன் காரணமாகவே ஸ்ரீரங்கத்தில் திருமங்கையாழ்வார் இராப்பந்து உற்சவத்தில் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்களை பண்ணோடு பாடும்முறை கொண்டுவரப்பட்டது இரவில் பத்துநாட்கள் நடைபெறுவது திருவாய்மொழி பாசுரங்களை பண்ணோடு பாடும்முறை கொண்டுவரப்பட்டது இரவில் பத்துநாட்கள் நடைபெறுவது திருவாய்மொழி திருவிழாவாகும்.இதில் நம்மாழ்வாரின் திருவாய்மொழி பண்ணுடன் பாடப்பட்டு அபிநயிக்கப்ப்ட்டு உரை சேவிக்கப்படும் இந்த அரையர் சேவை ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆழ்வார் திருநகரி போன்றத் திருத்தலங்களில் நடைபெற்று வருகின்றது.

உற்சவ காலங்களில் நாலாயிரம்திவ்யப்பிரபந்தல் பாசுரங்களை வைணவ பக்தர்கள் கோஷ்டியாக பாடிக்கொண்டே முன்னால் செல்வர். அவர்களுக்கு பின்னால் உற்சவ மூர்த்தி பாசுரங்களைக் கேட்டுக்கொண்டே வீதிஉலா வருவர் என்பது மரபு.

"பைந்தமிழ் பின் சென்ற பச்சைபசுங் கொன்றலே"

என்று மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் குறிப்பிடுகின்றார்

<u>நடன சிற்பங்கள்</u>

பல்லவர்கால சிற்பங்கள் பாறைகளிலேய செதுக்கப்பட்ட சிற்பங்கள் எனவும், கட்டிடங்களை அழகு செய்யும் சிற்பங்கள் என்றும் இரண்டு வகைபடும். இவற்றுள் மகாபலிபுரச் சிற்பங்கள் என்றும் இரண்டு வகைபடும் இவற்றுள் மகாபலிபுரச் சிற்பங்கள் தமிழின் மோலோங்கிய சிற்பக்கலைக்கு எடுத்துக் காட்டு ஆகும். தஞ்சை பெரிய கோயில் கருவறைக்கு நேர் மேலே உள்ள முதல் படியின் உள்திருச்சுற்றில் 108 கரணசிற்பங்களில் 81 சிற்பங்கள் முடிந்தும் 27 சிற்பங்கள் முடிந்தும் சிற்பங்கள் முடிவு பெறாமலும் உள்ளன அது போன்று கும்பகோணம் சாரங்கபாணி கோவிலும் சிதம்பரம் நடராசர் கோவிலும் குறிப்பிடத்தக்கவை

அது போன்று ஆவுடையார் கோவிலில்அமைந்துள்ள பல்வேறு வகையான சிற்பங்கள் வியப்புடையதாக அமைத்துள்ளது.

நடன ஓவியங்கள்

தமிழகத்தில் பல்லவர்கள், சோழர்கள், நாயக்கர்கள், கலைகளை நன்கு வளர்த்தனர். பல்லவர்களது ஆட்சியில் சைவ, வைணவ, சமயங்கள் மறுமலர்ச்சி பெற்றன. ஆலய வழிபாடுகள், கோவில் திருவிழாக்கள் சிறப்பாக நடந்தன. அவ்விழாக்களில் நாட்டியக்கலையும் சிறப்பாக இடம்பெற்றன.

முடிவுரை

தமிழரின் கலைகளில் நடனம் என்பது உயர்ந்ததொரு உன்னத இடத்தைப்பெற்றுள்ள ஆடலுக்கு அரசரான இறைவனே ஆடியதால் பக்தி சார்ந்த கலையாக போற்றப்படுகிறது நடனம் கற்றுக்கொண்டவர் ஒரு உயரிய அந்தஸ்து அடைய வழி வகுக்கின்றது தமிழர்களின் கலாசாரத்தை நடனம் மூலம் மக்களுக்கு எடுத்து இயம்புவதர்க்கு வழிவகை செய்கிறது பாவ ராக தாளம் சேர்ந்த பரதக்கலைபாரில் உள்ளோர் என்றும் போற்றும் கலை எனும் பத்மஸ்ரீ தண்டாயுதபாணி பிள்ளை அவர்களின் பாடலை நினைவு கூர்ந்து உலகம் புகழும்நாட்டியக் கலையைஉயிராய் மதித்தே வாழ்ந்திடுவேன்

நடனக்கலைகளை வளர்த்ததில் ஆலயங்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது. பண்டையகாலத்தில் ஆலய வழிபாடுகளில் நடனமும் ஒரு அங்கமாக இருந்துள்ளது.

தமிழகத்தில் சைவசமயமும், வைணவமும் தலைத்தோங்கிய காலத்தில் நடனக்கலையை பக்திநெறி வளர்ப்பதற்கு ஒருமுக்கிய கருங்கோலாக நடனத்தின் மூலமாக மக்களுக்கு எடுத்துரைத்தனர். ஆழ்வார்கள் நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தின் மூலம் இசை, நடனம், பாடலின் பொருளை எடுத்து இயம்புகிறது. என அரையர் சேவை மூலம் உணர்த்தினர்.

மேலும்சித்திரங்கள் கற்சிலைகள் மூலம் மன்னர்கள் கலைகளை வளர்த்தும் கலைஞர்கலை ஆதரித்தும் வந்தனர். இவ்வாறாக மனிதர்களின் மனதை செம்மைபடுத்தவும் அவர்கள் நல்வழியில் பக்தி நெறி தவறாது வாழவும் வருங்கால சந்ததியினருக்கு உதாரணமாகவும் வாழ்க்கையின் தத்துவங்களை உணரவும் நடனக்கலை ஒரு பாலமாக இருந்துள்ளது. என்பதை இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.

தமிழ் நாட்டில் ஓவியக்கலைக்கு புத்துயிர் கொடுத்தவன் மகேந்திரவர்மன் (கிபி.600-630) ஆவான்.இவன் சித்திரம் வரைவதில் புகழ்பெற்றவன்.

இவரது சித்தன்னவாசல் அர்த்த மணடபத்தின் மேல் விமானத்தில் காணப்படும் ஓவியம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும் அர்த்தமணடபத்தில் உள்ளதூண்களில் இரு நாட்டியமாகும் அரம்பையர்களின் உருவம் நம் உள்ளதை கவரும்படி உள்ளது. வலப்புறத் தூண்களில் மகேந்திரவர்ம பல்லவனும் அவரது மனைவியும் சித்தரிக்கப்பட்டுள்ளன உட்புறம் உள்ள ஓவியங்களில் நடனக்களையும் வடிவங்கள் தீட்டப்பட்டுள்ளன. சித்தன்னவாசலில் இரு நடனமாகும் மங்கையரின்

சித்திரங்கள் மகேந்திரவர்மன் பரதநாட்டியக்கலைக்கு அளித்தஆதரவை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

துணை நூற்பட்டியல்

1. பரதார்ணவம் - நந்திகேசுவரர்

2. திருக்கோயில்நுண்கலைகள் – டாக்டர் கே.ஏ.பக்கிரிசாமிபாரதி-

3. இசைத்தமிழ் அறிஞர்கள் – தொகுதி -2 முனைவர்சண்முக செல்வகணபதிமுனைவர் கற்பகம்

மேற்கோள்கள்

4.பத்மஶ்ரீ தண்டாயுதபாணிபிள்ளை அவர்கள் இயற்றிய

உலகம் புகழும் நாட்டியக்கலையை- எனும் பதம்